# பொதுக்காலம் 26ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

"பிறர் நம்மை விட உயர்ந்தவர் என எண்ணுகிறவர் பெரியவரே!" என்ற சிந்தனையோடு ஆண்டின் பொதுக்காலம் 26ஆம் ஞாயிறைச் சிறப்பிக்க வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றோம்.

இறை வல்லமையை அனைவருக்கும் அளிப்பது இறைவனின் திட்டம். அதைத் தடுக்க நினைப்பது தவறாகும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பிரிவினை எண்ணங்களும், 'நான்', 'எனது', 'எனக்கு மட்டும் தான்' என்ற சுயநலமும், அடுத்தவர்மீது வெறுப்பையும், பொறாமையும் தூண்டி விடுகின்றது. ஏழைகள், தாழ்நிலையில் இருப்பவர்கள் செய்யும் நல்ல செயல்களையும் ஏற்றுக் கொள்ள மனம் தயங்குகின்றது. ஆனால் இறைவன் முன்னிலையில் அனைவரும் சமமானவர்களே!

மேலும் பிறரை பாவம் செய்ய தூண்டுவதும், நாம் பாவத்தில் விழுவதும் பெருந்தண்டனையைப் பெற்றுத் தரும். எனவே நம் புலன்களை அடக்கி, வாழ்வைத் தூயதாய்க் காத்துக் கொள்வோம்.

நம் எண்ணங்களையும் செயல்களையும் பிறருக்குப் பயன் தருவதாய் மாற்றுவோம். எளியவர் நலனில் அக்கறையோடு அவர்களுக்கு எதிரான வன்செயல்களைக் களைய முற்படுவோம். கடவுளின் விருப்பப்படி வாழவும், பிறரின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக வாழும் வரம் வேண்டியவர்களாய் இத்திருப்பலியில் பங்கெடுப்போம். இறையாசீர் பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! பிறருடைய ஆன்மீக வாழ்விலும் வளர்ச்சியிலும் நாம் ஒரு படிக்கல்லாக இருக்கலாமே தவிர, ஒருபோதும் தடையாக இருக்கக் கூடாது என் எடுத்துரைக்கும் எண்ணிக்கை நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! நமக்குக் கீழ் வேலை செய்பவர்கள் அல்லது நம்மைவிட வசதி வாய்ப்பு குறைந்தவர்களிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென எடுத்துரைக்கும் தூய யாக்கோபின் திருமுக வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நலன்களின் ஊற்றே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதிநிலையினர் அனைவரும் உமது கருவிகளாக செயல்பட்டு, இறையாட்சியின் விழுமியங்களை எங்கும் பரப்பிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகத்தின் ஊற்றே எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்கள், தன்னலம் பாராமல், மக்களின் நல்வாழ்வினைக் கண்முன் கொண்டு, சிறப்பான நலத்திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்வு வளமடைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா! நாங்கள் யாருடைய வாழ்விலும் தடைக்கல்லாக இல்லாமல், படிக்கற்களாக இருந்து அவர்கள் வாழ்விலும், ஆன்மீகத்திலும் மென்மேலும் வளர உமது அருளைத் தந்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. அமைதியின் இறைவா! யாரும் நினையாத ஆன்மாக்கள், உத்தரிக்கின்ற ஆன்மாக்க, எங்கள் குடும்பங்களில் இறந்து போன அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய இளைப்பாற்றி கிடைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com